நெஞ்சில் கனல் மணக்கும் பூக்களின்

# உள்ளொளி

**ஒளி 1, சுடர் – 11 பிப்ரவரி , 2012 – , திருவள்ளுவர் ஆண்டு 2043**



இல்லவாசிகள் தேசத்தின் உடைமை
எவர்க்கும் இவர்கள் இல்லை அடிமை

தமிழக சிறை இல்லங்களில் உள்ள இல்லவாசிகளின் படைப்பு

<u>64 மரக்கன்றுகள் நடும் விழா</u>

கடந்த பிப்ரவரி 24–ம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு முதலமைச்சர் அவர்களது கொள்கைக்கு இணங்க புழல் மத்திய சிறை வளாகத்தில் வெற்றிடமாக இருக்கும் திறந்த வெளியில் காய்கறி தோட்டம் ஒன்று மாண்புமிகு தமிழக சட்டமன்ற பேரவைத் தலைவர் திரு.ஜெயக்குமார், அவர்களால் சிறைத்துறைத் தலைவர் திரு.ச.கு.டோக்ரா, இ.கா.ப மற்றும் இதர சிறைத்துறை அலுவலர்கள் முன்னிலையில் துவக்கப்பட்டது.



அப்பொழுது மாண்புமிகு சட்டமன்ற பேரவைத் தலைவர் திரு.ஜெயக்குமார், சிறைத்துறையின் செயல்பாடுகளைப் பாராட்டி பசுமையான தமிழகம் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனவை நனவாக்க அனைவரும் முற்படி வலியுறுத்தியதுடன் 64 மரக்கன்றுகளை நடும் விழாவை தொடங்கினார்.



# உள்ளொளி குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| புரவலர் | திரு.ச.கு.டோக்ரா, இ.கா.ப.,<br>கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும்<br>சிறைத்துறைத் தலைவர்,<br>சென்னை.8. |
| தலைவர் | திரு.ச.கு.டோக்ரா, இ.கா.ப.,<br>கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும்<br>சிறைத்துறைத் தலைவர்,<br>சென்னை.8. |
| உறுப்பினர் | திரு.எஸ்.இராஜேந்திரன், எம்.ஏ.,<br>கண்காணிப்பாளர்,<br>மத்திய சிறை – 1<br>புழல். |
| உறுப்பினர் | திரு.பா. தியாகராஜன், எம்.ஏ.,<br>தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர், (பொ)<br>சென்னை.8. |

## இல்ல படைப்பாளர் ஒருங்கிணைப்புக் குழு

மத்திய சிறை–1 (தண்டனை), புழல் – இல்லவாசி பொழிலன்

மத்திய சிறை–2 (விசாரணை), புழல் – இல்லவாசி முகமது ஹனிபா

பெண்கள் தனிச்சிறை, புழல் – இல்லவாசி மேரி சேவியர்

மத்திய சிறை, வேலூர் – இல்லவாசி சாந்தன்

மத்திய சிறை, மதுரை – இல்லவாசி சிவகாமு

மத்திய சிறை, திருச்சி – இல்லவாசி கல்கி மோகன்

மத்திய சிறை, சேலம் – இல்லவாசி கண்ணன்

மத்திய சிறை, கோவை – இல்லவாசி விஜயசங்கர்

மத்திய சிறை, பாளையங்கோட்டை – இல்லவாசி அய்யாதுரை

நெஞ்சில் கனல் மணக்கும் பூக்களின்

உள்ளொளி

(உள்சுற்றுக்கு மட்டும்)

<u>பொருளடக்கம்</u>


| | | பக்க எண் |
|---|---|---|
| 1. முன்பக்க அட்டை | : | 1 |
| 2. 64 மரக்கன்றுகன் நடும் விழா | : | 2 |
| 3. உள்ளொளி குழு உறுப்பினர்கள் | : | 3 |
| 4. இல்லபடைப்பாளர் ஒருங்கிணைப்புக் குழு | : | 4 |
| 5. பொருளடக்கம் | : | 5 – 6 |
| 6. தோழியே விழித்தெழு | : | 7 |
| 7. விடுதலை | : | 8 |
| 8. சிரிப்பு வெடிகள் | : | 9 |
| 9. விடியுமென | : | 10 |
| 10. குழந்தை ஓவியம் | : | 11 |
| 11. சுத்தமான குடிநீர் | : | 12 |
| 12. குட்டிக் கதை | : | 13 |
| 13. நேரத்தின் அருமை | : | 14 |
| 14. குருங்கதை | : | 15 |
| 15. சுவாமி விவேகானந்தரின் சிந்தனை துளிகள் | : | 16 |
| 16. எழுது பொருட்கள் மற்றும் நோட்டு புத்தகம் வழங்குதல் | : | 17 |
| 17. காது மூக்கு தொண்டை மருத்துவ முகாம் | : | 18 |
| 18. உழவன் | : | 19 |
| 19. தாய் | : | 20 |
| 20. மின்னுவது இந்தியா | : | 21 |
| 21. காந்தி மகான் | : | 22 |
| 22. கல்விச்சான்றுகள் | : | 23 |
| 23. புதிய காவலர் குடியிருப்பு திறப்பு விழா | : | 24 |

| | | |
|---|---|---|
| 24. பயனாளிகளுக்கு நிதி உதவி வழங்கும் விழா | : | 25 |
| 25. சட்ட விழிப்புணர்வு முகாம் | : | 26 |
| 26. சுதந்திர காற்று | : | 27 |
| 27. தவம் | : | 28 |
| 28. கல்விக்கண் திறப்போம் | : | 29 |
| 29. புதிய பரிமாணம் | : | 30 |
| 30. தீயணைப்பு பயிற்சி செயல்முறை விளக்கம் | : | 31 |
| 31. இன்றைய இளைய தலைமுறை | : | 32 |
| 32. இலட்சிய பாதை | : | 33 |
| 33. மனம் வருந்துகிறேன் | : | 34 |
| 34. தெரிந்து கொள்ளுங்கள் | : | 35 |
| 35. சிட்டுக்குருவியும் நானும் | : | 36–37 |
| 36. உண்மையான நட்பு | : | 38 |
| 37. சிறப்புப் பேட்டி | : | 39 |
| 38. புழல்–2 மத்திய சிறை முகப்பு தோற்றம் | : | 40 |

# தோழியே விழித்தெழு

ஏன் ஏங்குகிறாய் எதற்காகத் தயங்ககிறார் – உண்.

ஏக்கத்தில் நான் ஒரு தவிப்பைக் காண்கிறேன்–உன்

தயக்கத்தில் நான் ஒரு கோழையைக் காண்கிறேன்–எழுந்திரு !

ஏக்கத்தை எண்ணமாக்க எண்ணத்தைச் சிந்தையாக்க

சிந்தனையைச் செயலாக்க ஏழுந்திரு !
தோழியே

பழையது நினைத்து கவலைப்படாதே புதியது நினைத்து புத்துயில் ஊட்டு

வாழ்க்கை என்பது ரோஜா செடி அதில் பூவும் இருக்கும் முள்ளும் இருக்கும்.

பூவைக் கண்டு மயங்கிவிடாதே

முள்ளைக் கண்டு பயந்துவிடாதே

நீ அடைவதெல்லாம் இறைவன் உணக்கக் கொடுக்கும் பரிவு

நீ இழப்பதெல்லாம் இறைவன் உணக்குக் கொடுக்கும் பரிவு.

உழைப்பிற்கு நேரம் ஒதுக்கு வெற்றியை தரும்

சிந்திக்க நேரம் ஒதுக்கு சக்தியை தரும்

படிக்க நேரம் ஒதுக்கு உன் அறிவை பெருக்கும்

நட்புக்கு நேரம் ஒதுக்கு மகிழ்ச்சியான பாதையை காட்டும்

பொதுசேவைக்கென்று நேரம் ஒதுக்கு அழியாப்

புகழை பெற்றுத்தரும்

உதவுவதெற்கென்று நேரம் ஒதுக்கு நம் மனதிற்கு

திருப்தியை தரும்.
ஏ தோழி

நீ தாயின் வயிற்றில் இருக்கும்போது தாயிக்கு பாரம்

நீ பிறந்ததும் மண்ணிற்கு பாரம்

நீ அறிவில் சிறந்து வளர்ந்தால் அது அபாரம் இல்லையேல்

நீ உலகின் வீன் பாரம்.

எம்.சித்ரா க/பெ. முத்துபாண்டி
விசாரணை சிறைவாசி
மகளிர் தனிச்சிறை, திருச்சி–8

## விடுதலை

இலையுதிர் காலத்து மரமாய்
இளைத்துக் கொண்டிருப்பவனே
இறந்த காலத்திலிருந்து
மீளவும் முடியாமல்
நிகழ்காலத்தோடு
வாழவும் முடியாமல்
நிராயுதபாணியாய்
நின்று கொண்டிருப்பவனே !

தோல்விகள் துரத்த துரத்த
விரக்தியின் விளிம்பில்
விடுதலையை வேண்டி
தவம் இருப்பவனே
வாங்க வைத்த பட்டங்கள்
வயிற்றை நிரப்பாது
தூங்கிகொண்டேயிருந்தால்
விடுதலை கிடைக்காது !

ஒட்டை குத்தித் திறக்காத
குஞ்சின் வாழ்க்கை
முட்டைக்குள்ளேயே முடிந்துபோகும்
உதைப்பதற்கு கூட சக்தியற்று இருந்தால்
கருவறையிலேயே நீ
கல்லறையாகி இருப்பாய்
உடலுக்குத்தான் சிறை – உன்
உள்ளத்துக்கல்ல உழைப்புக்கல்ல !

உன்னை திருத்திக் கொள்வதற்கும்
இன்னலை பொறுத்துக்கொள்வதற்கும்
தயங்கினால் விடியல் பிறக்காது
உலகத்திற்காக அல்ல உனக்காக
உனது விடுதலைக்காகவாவது
உழைக்க வேண்டாமா நீ
விழித்திடு ! உழைத்திடு !
விடுதலை உன் காலடியில் !

கு. முனுசாமி
தண்டனை சிறைவாசி எண் – 2110
தண்டனை சிறை – 1
புழல், சென்னை – 66

## சிரிப்பு வெடிகள்

ஒருவன் : நேத்து தொடங்கிய கட்சி ஊர்வலத்துக்கு இவ்வளவு கூட்டமா ?

ம.ஒருவன் : இருக்காதாபின்னே தொடங்குவதும் டாஸ்மார்க் கடையிலே முடிவதும் முனியாண்டி விலாஸ் ஓட்டலில்.

நீதிபதி; : வரப்புத் தகராறுக்கு கொலை செய்யாதயா கூடி பேசித் தீர்த்திருக்கலாமே.
குற்றவாளி : கூலி பேசித்தான் தீர்த்தோம் எஜமான்.

கண்டக்டர் : யோவ் அறிவு இருக்கா ஓடுற பஸ்ல ஏறுறியே ?
பயணி : யோவ் உனக்கு அறிவு இருக்கா ஓடாத பஸ்ல ஏறுனா எப்படி ஊர் போய் சேருறது

ஒருவன் : என்னடா முட்டைக்கு பச்சை பெயிண்ட் அடிக்கற
ம.ஒருவன் : டாக்டாதான் பச்சை முட்டை சாப்பிடச் சொன்னார்

பாரில் ஒருவன் : மனுசனுக்கு சந்தோசம் வேணும் ஆறுலேயும் சாவு நூறுலேயும் சாவு
ம.ஒருவன் : யாருக்கு எப்படியோ உனக்கு பாரில்தான் சாவு

ஒருவன் : என் மனைவி மந்திரி மாதிரி.
ம.ஒருவன் : எப்படி உனக்கு புத்தி சொல்வாங்களா ?
ஒருவன் : அவ என்கிட்ட திருடினாலும் ஒன்றும் செய்ய முடிவதில்லை.

ஒருவன் : என்னடா பேசாம போற ?
ம.ஒருவன் : நான் முட்டாளுங்களுடன் பேசுவதில்லை.
ஒருவன் : நான் பேசுவேன் போயிட்டு வாரேன்.

ஒருவன் : கடவுள் தேவையில்லாம மனுசனுக்கு குடல் வாலை படைத்திருக்காரே நியாயமா ?
ம.ஒருவன் : உனக்குத் தேவைப்படாம இருக்கலாம் ஆனா டாக்டருக்கும் மருந்துக்கடைக்காரருக்கும் தேவைப்படுதே.

வீட்டில் நுழையும் விருந்தாளியிடம் – சும்மா வாங்க குரைக்குற நாய் கடிக்காது.
விருந்தாளி : குரைக்கிற நாய் கடிக்காதுன்னு உனக்கும் தெரியும் எனக்கும் தெரியும் உன் வீட்டு நாய்க்கு தெரியுமா ?

வாடிப்பட்டி ப.வீர.கண்ணன்
தண்டனை சிறைவாசி எண் – 3104
தண்டனை சிறை – 1
புழல், சென்னை – 66

## விடியுமென...

பாலைவன வாழ்க்கையில் ..

பசுமையான நினைவுகள்..

கண்ணீரிலிலும் பன்னீர் வாசம்..

நினைவுகளின் விளிம்பில்..

பட்டாம்பூச்சிக்கு பட்டம் எதற்கு..

கற்றுக் கொள்வதற்கு எதுவும் இல்லை இனி..

முடியாத இரவுகளாக..

விடியாத என் வாழ்க்கை..

விடியும் என்ற நம்பிக்கையில் !..

தினமும் விடியலைத் தேடி !...

அன்பின் ஸ்பரிசம் தேடி !...

ஆதவன் ஒளியில் நாளும் !...

ஆசையற்ற மனம் வேண்டி !...

ஆண்டவன் பாதம் தேடி !...

அலைகின்றேன் தினம் தினம்

அத்திப்பூவின் வாசம் நுகரும்

முன்னே அதிகாலை பொழுதினிலே ..!

பிரியமுடன்
உன் நேசப்பிரியன்
இரா. சென்னமூர்த்தி.
ஆயுள் தண்டனை சிறைவாசி எண். 23992
மத்திய சிறை, வேலூர் – 2.

குழந்தை ஓவியம்



மலர் ஓவியம்





வேலூர் மத்திய சிறையின் இல்லவாசிகளுக்கு சுத்தமான குடிநீர் வசதி வேலூார் ரோட்டரி கிளப் மூலம் வழங்கப்பட்டது.



## குட்டிக்கதை

உண்மை : அடக்கம் முடக்கமல்ல

அந்த குரங்கு கூட்டத்தின் இப்போதைய பொழுது போக்கு தமது கூட்டத்தை சேர்ந்த இளங் குரங்கொன்றை பற்றி உரையாடுவதுதான்.

அதன் அண்மைக்காலப் பழக்கம் வித்தியசாமாக இருக்கிறது. எப்போதும் ஓர் இடத்தில் அமைதியாக அமர்ந்திருக்கிறது. அந்தப் பாதையில் செல்லும் மனிதர்களை மிரட்டுவதில்லை. முன்பு போல் தொந்திரவு செய்வதில்லை.

மனிதரை மிரட்டுவதும் தொந்தரவு செய்வதும்தான் அவை மத்தியில் வீரமாக போற்றப்படுகிறது.

இந்தக் குரங்கின் வித்தியசாமான போக்கு வேறு சில குரங்களுக்கு பிடிப்பதில்லை. தம்மைப் போலவே இந்தக் குரங்கும் செய்ய வேண்டுமென்றும் தமது பிரதிபோல் இருக்க வேண்டும் என்றும் ஒவ்வொன்றும் எண்ணின. அமைதியாக இருப்பதை பார்த்துத் தமக்கு பயந்துவிட்டது என்றும் அதன் திறமையெல்லாம் மழுங்கிவிட்டது என்றும் சொல்லித் திரிந்தன.

வித்தியாசாமன குரங்கோ இப்போதும் அமைதி காத்தது. ஆர்ப்பாட்டம் பண்ணவில்லை. உரத்துச் சப்தம் இடவில்லை. இதன் அமைதி மற்றவைகளுக்கு மேலும் உற்சாகத்தினை கொடுத்தது. பயந்து தன்னை முடக்கிக் கொண்டு விட்டதாக எண்ணின. அடுத்தவரிடம் கூறின.

அந்த வேளை ‘‘பார்த்தாயா ? இந்தக் குரங்கு வட்டத்திலேயே இதுதான் சிறந்தது. என்ன அடக்கம் என்ன அமைதி ! உண்மையிலேயே இதுதான் பெரியவர்’’. என்றார் ஒரு மனிதர். தலையாட்டினார் அடுத்தவர்.

ம.தி. சாந்தன்,
மரண தண்டனை சிறைவாசி எண்.13905
மத்திய சிறை, வேலூர் – 2.

## நேரத்தின் அருமை

ஒரு வருடத்தின் மதிப்பை உணரவேண்டுமானால்
தேர்வின் தோல்வி அடைந்த மாணவனைக் கேளுங்கள் !

ஒரு மாதத்தின் மதிப்பை உணர வேண்டுமானால்
குறைப் பிரசவத்தில் குழந்தையை பெற்றெடுத்த
தாயை கேளுங்கள்!

ஒரு வாரத்தின் மதிப்பை உணர வேண்டுமானால்
வாரப்பத்திரிக்கையாளரிடம் கேளுங்கள்!

ஒருநாளின் அருமையை தெரிய வேண்டுமானால்
ஒரு நாள் வேலைக்கிடைக்காமல் போன
தினக்கூலித் தொழிலாளியிடம் கேளுங்கள்!

ஒரு மணிநேரத்தின் அருமை தெரிய வேண்டுமானால்
ரயிலை தவறவிட்ட பயணியிடம் கேளுங்கள்!

ஒரு வினாடி மதிப்பு உணர வேண்டுமானால்
விபத்தில் உயிர் தப்பியவரை கேளுங்கள்!

ஒரு மில்லி செகண்டின் அருமை தெரிய வேண்டுமானால்
ஒலிம்பிக் போட்டியில் தங்கத்தை தவறவிட்டு
வெள்ளி பதக்கம் பெற்றவரை கேளுங்கள் !
நேரம் என்பது
விலை மதிக்க முடியாத செல்வம்.

ஆ. விஜய சங்கர் எம் ஏ., பிஎல்.,
ஆயுள் தண்டனை சிறைவாசி
எண்71712 (முதல் வகுப்பு)
மத்தியசிறை கோவை – 18

## குறுங்கதை

ஒரு குருவிடம் மூன்று சீடர்கள் இருந்தார்கள் அவர்களின் புத்திசாலித்தனத்தைப் பார்க்க குரு என்ன செய்தார் தெரியுமா ? ஒரு மண்பானையை தலை கீழாகக் கவிழ்த்து வைத்து அந்த பானைக்குள் என்ன இருக்கிறது தெரியுமா ? என்று கேட்டார். முதல் சீடன் அதில் எதுவுமில்லை என்று சொல்லிவிட்டான். பின்பு இரண்டாவது சீடன் பானையை நேராக திருப்பி வைத்து விட்டு கையைவிட்டுத் தேடிவிட்டு அதில் ஒன்றுமில்லை என்று சொல்லி விட்டான். குரு மூன்றாவது சீடனை அழைத்து கேட்டார். அந்த சீடன் “ பானையில் காற்று இருக்கிறது” என்று சொன்னான்.

மூன்றாம் சீடன் புத்திசாலித்தனமாக சிந்திக்கிறான் என்று உணர்ந்து கொண்ட குரு இரண்டாவது சோதனை வைக்கிறார். இந்த பானையிலுள்ள காற்றினை வெளியேற்ற முடியுமா ? என்று கேட்டார். இம்முறை போட்டிக்கு முதல் சீடர் அழைக்கப்படவில்லை. இரண்டாவது சீடன் காற்றை வெளியேற்ற முடியும் என்று சொல்லி ஒரு பெரிய கல்லைக் தூக்கி வந்தான். கல்லை பானை மேல் போட்டால் காற்று வெளியே போய்விடும் என்றான். குரு அந்த சீடனை தடுத்து மூன்றாவது சீடனை அழைத்து பானையிலுள்ள காற்றை வெளியேற்ற முடியுமா ? என்றார் மூன்றாவது சீடன் முடியும் என்று சொல்லி வேறு ஒரு பானையிலிருந்த தண்ணீரை இந்த பானையில் ஊற்றினான். பானையிலிருந்த காற்று வெளியேறிவிட்டது. ஆக, அவரவர் சிந்தனைக்கு தக்கவாறு செயல்கள் அமைகிறது. புதிய எண்ணங்கள் உள்ளே போகும் போதுதான் புதிய சிந்தனை உருவாகிறது.

ஆ. விஜய சங்கர் எம் ஏ., பிஎல்.,
த/பெ ஆ. ஆறுமுகம்
ஆயுள் தண்டனை சிறைவாசி
எண்71712 (முதல் வகுப்பு)
மத்தியசிறை கோவை – 18

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனை துளிகள்

நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய் நீ உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவனாகவே ஆகி விடுவாய் !

" இல்லை" என்று ஒரு போதும் சொல்லாதே
"என்னால் இயலாது" என்று ஒரு நாளும் சொல்லாதே!

நீ வரம்பில்லா வலிமை பெற்றவன் உன்னுடைய உண்மை இயல்போடு ஒப்பிடும்போது, காலமும் இடமும் கூட ஒரு பொருட்டல்ல!

நீ எதையும் எல்லாவற்றையும்
சாதிக்கக் கூடியவன். எல்லாம் வல்லவன் நீ !
மிகப் பெரிய உண்மை இது
வலிமைதான் வாழ்வு !
பலவீனமே காரணம் !
நான் எதையும் சாதிக்க வல்லவன்
என்று சொல். நீ உறுதியுடன் இருந்தால்
பாம்பின் விஷம் கூடச் சக்தியற்றதாகி விடும்

மக்களுக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேறுபாடு அவர்கள் தங்களுடைய மனதை ஒரு முகப்படுத்தும் ஆற்றலின் வேற்றுமையில் தான் அடங்கியிருக்கிறது.

உனக்கு தேவையான எல்லா வலிமையையும் உதவும் உனக்குள்ளேயே குடி கொண்டிருக்கின்றன.

தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும் அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

ஆ. விஜய சங்கர் எம் ஏ., பிஎல்.,
த/பெ ஆ. ஆறுமுகம்
ஆயுள் தண்டனை சிறைவாசி
எண்71712 (முதல் வகுப்பு)
மத்தியசிறை கோவை – 18

கோவை மத்திய சிறையில் 8ம் வகுப்பு, 10ம் மற்றும் +2 வகுப்பு பயிலும் சிறைவாசிகளுக்கு எழுது பொருட்கள் மற்றும் நோட்டு புத்தகம் சிறைத்துறைத்துணைத் தலைவர் மற்றும் திரு.கவிஞர் கவிதாசன் ஆகியோரால் சிறைவாசிகளுக்கு வழங்கப்பட்டது.



கோவை பெண்கள் இணைப்புச் சிறையில் காந்தி ஜெயந்தி விழாவை முன்னிட்டு இல்லவாசிகள் பங்கேற்ற இசை நிகழ்ச்சி விழா



கோவை மத்திய சிறையில் பிரிசன் மினிஸ்ட்ரி இந்தியா சார்பாக கிராம சமுதாய மருத்துவமனை மூலம் இல்லவாசிகளுக்கு காது, மூக்கு தொண்டைம ற்றும் பல் பரிசோதனை முகாம் நடைபெற்றது.



கோவை மத்திய சிறையில் பிரிசன் மினிஸ்ட்ரி இந்தியா சார்பாக கிராம சமுதாய மருத்துவமனை மூலம் இல்லவாசிகளுக்கு காது, மூக்கு தொண்டை மற்றும் பல் பரிசோதனை முகாம் நடைபெற்றது.



**உழவன்**

காட்டாறுகளை
கால்வாய்களாக்கி
கழனி தனை
பசுமையாக்கி
உழைப்புதனை
உழவுமாக்கி
வியர்வைதனை
உரமாக்கி
வறுமைதனில்
பொறுமை கண்டு
துன்பம் தனில்
இன்பம் கண்டு
கடமையில்
உண்மையுண்டு
உருத் உணவு
உருவாக்கும் தொண்டு
சுற்றத்தாரை
காத்திடும் உழவனே
சூழ்ச்சிகள் தானில்லை
உன்னிடத்தில் உழவனே
கர்வ மில்லாத
உன்னத உழவனே
உலக ஆணிவேரே
உழவனே !! உழவனே!!

அரங்க கோவிந்தராசன்
தண்டனை சிறைவாசி எண். 501
மத்தியசிறை கோவை.

# தாய்

அன்பே உருவாகி – உறவுக்கு
ஊஞ்சல் கட்டுபவள் தாய்
தன்னுதிரத்தில் வரித்தெடுத்து
நமக்குயிர் தருபவள் தாய்
மாண்பு அறியாத மிருக பிள்ளை பிறந்தாலும்
அன்பு பால் தரும் கருணையே தாய்
பசித்தேங்கும் முகம் பார்த்து – ஞானப்
பழம் தரும் சோலையாம் தாய்
இருக்கும் படிசோறு தனக்கென்றெண்ணாமல்
கொடுக்கின்ற குணத்தின் தாய்
துடிக்கும் உடல் கண்டு தோளில் இடந்தந்து
அணைக்கின்ற தெய்வமவள் தாய்
பொன்னன்று பொருளன்று பெரும்
புகழன்று அவள் தேவை
கொடை என்ற கலையாலே–மனம்
களி கொள்ளும் கனிவே தாய்
பெற்றப்பிள்ளையையும் பிறந்த பொன்னாட்டையும்
இரு கண்களென காப்பவள் தாய்
தாய்க்கு நிகர் தெய்வமுமில்லை
தாயினும் சிறந்த கோயிலுமில்லை.

கோ.தங்கவேல்
தண்டனை சிறைவாசி எண்.183
மத்திய சிறை, சேலம்.

## <u>மின்னுவது இந்தியா</u>

பூத்து குலுங்கும் சோலையாம்
வண்ண மலர்கள் கூட்டமாம்
மின்னும் வண்ண பூச்சிகளாம்
ஆகாயத்தில் இருந்து பார்த்தாலும்
மின்னுவதும் எங்கள் இந்தியா
மிளிர்வதும் எங்கள் இந்தியா
ஆன்மீகமும் இங்கு உண்டு
அக்னியும் இங்கு உண்டு
அகிம்சையும் இங்கு உண்டு
எழுநூறு கோடி ஆனாலும்
எழுச்சி அடைவது இந்தியா
புவி வெப்பம் அடைந்தாலும்
பசுமை புரட்சி செய்து
அதிலும் மின்னும் இந்தியா
அற்புதம் எங்கள் இந்தியா

படைப்பு
ப. நாகரத்தினம்
விசாரணை சிறைவாசி எண்.4038
மத்திய சிறை, கடலூர்.

## காந்தி மகான்

என் நாட்டின் தலைமகனே என்று பெருமையுடன்

பேசிட பிறந்த பெருமகனே வெள்ளையனை வேருடன் பிடுங்க

வெவ்வேறு கலைகளைக் கற்று கையாண்டு களைபறித்தான் நம் காந்தி மகான்

கடமை உணர்வோடு நம்மைக் கட்டி காத்தான் காந்தி மகான்

அன்று உண்ணாமல் உறங்காமல் நீர் உழைத்த உழைப்பில்

அன்று முதல் இன்று வரை நம் நாட்டில் பேரும் புகழும்

இமயமலைபோல் வானளாவி உயர்ந்து கொண்டே இருக்கிறது

உமது உழைப்பில் அன்று நம்மை விட்டு விலகி ஓடிய

அந்நியன் இன்று பணிந்து கொண்டு நம்மிடம் பணி செய்ய பரிதாபத்தோடு

வரிசையாய் நிற்கின்றான் வணக்கத்தோடு

அதுவும் நீர் செய்த போதனையின் சாதனைதான்

கமுதி. பி.கருணாமூர்த்தி,
தண்டனைசிறைவாசி எண்.4563
மத்தியசிறை, மதுரை.

மத்திய சிறை, கடலூர் இல்லவாசிகள் 8–ம் வகுப்பு பயின்றதற்கான கல்விச்சான்றுகள் சிறைக் கண்காணிப்பாளர் மூலம் வழங்கப்பட்டது.



கடலூர் மத்திய சிறையில் சுதந்திர தினவிழா இல்லவாசிகள் நிகழ்ச்சி விழா கொண்டாடப்பட்டது



கடலூர் மத்திய சிறை காவலர்களின் புதிய காவலர் குடியிருப்பு திறப்பு விழாவில் மாவட்ட ஆட்சியர் திருமதி.வே.அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் மரக்கன்றுகள் நடுதல்.




மகாத்மா காந்தி சமுதாய கல்லூரியில் மத்திய சிறை கடலூர் இல்லவாசிகளுக்கு புத்தகங்கள் சிறை கண்காணிப்பாளர் மூலம் வழங்கப்பட்டது.



சிறைத்துறை துணைத் தலைவர் திரு.பகோவிந்தராஜன் அவர்கள் தலைமையில் மற்றும் சிறை கண்காணிப்பாளர் திரு.ஆ.முருகேசன் அவர்கள் முன்னிலையில் சிறைவாசிகளால் பாதிக்கப்பட்ட 14 பயனாளிகளுக்கு ரூ.4,20,000/– நிதி உதவி வழங்கும் விழா நடைபெற்றது.




சிறைத்துறை துணைத் தலைவர் திரு.பகோவிந்தராஜன் அவர்கள் தலைமையில் மற்றும் சிறை கண்காணிப்பாளர் திரு.ஆ.முருகேசன் அவர்கள் முன்னிலையில் சிறைவாசிகளால் பாதிக்கப்பட்ட 14 பயனாளிகளுக்கு ரூ.4,20,000/– நிதி உதவி வழங்கும் விழா நடைபெற்றது.






சட்ட விழிப்புணர்வு மற்றும் சட்ட கல்வியறிவு முகாமில் சார்பு நீதிபதி திரு. ஆர். ஸ்ரீதரன் எம்.எல்., மற்றும் திரு.கு. ஆனந்தன், கண்காணிப்பாளர் கலந்து கொண்டார்கள்



சட்ட விழிப்புணர்வு மற்றும் சட்ட கல்வியறிவு முகாமில் கலந்து கொண்ட இல்லவாசிகள்

## சுதந்திர காற்று

காந்தி மகான் சுதந்திரம் பெற்ற பின் சுவாசித்து விட்ட காற்றை

நாம் சுதந்திரமாய் சுவாசித்து சுதந்திர காற்றோடு

சுற்றிச் செல்வோம் நமது நாட்டில் (அதுமட்டுமல்ல)

ஆடும் மயில்களும் நமது நாட்டில் சுதந்திரமாய் ஆடி மகிழட்டும்

பாடும் பறவைகள் நமது நாட்டில் சுதந்திரமாய் பாடி மகிழட்டும்

கூவும் குயில்கள் நமது நாட்டில் சுதந்திரமாய் கூவி மகிழட்டும்

சுதந்திர காற்று நமது சுதந்திர நாட்டில் சுதந்திரமாய்

சுற்றி எங்களை வாழ்விக்கட்டும்

தனக்குத்தானே சுதந்திரம் பெற்ற சுதந்திர கடலை உமது அலைகள் எங்களின் காந்தி

மகான் கரையை தொட்டு தொட்டு சுதந்திரமாய்

தொட்டு மகிழட்டும்

கமுதி. பி.கருணாமூர்த்தி,
தண்டனை சிறைவாசி எண்.4563
மத்தியசிறை, மதுரை.

## தவம்

தவம் அன்பை வளர்க்கிறது,
தவம் அறிவை விரிவடைய செய்கிறது,
தவம் ஆனந்தம் தருகிறது,
தவம் ஆன்மாவை காக்கிறது.

யாகம் மோட்சம் தருகிறது,
யாகம் யோகம் வளர்க்கிறது,
யாகம் இறையை நாடுகிறது,
யாகம் கடவுளில் முடிகிறது.

உணர்வு உன்னில் என்னில் உள்ளது,
உறவு என்னில், உன்னில் உள்ளது,
உலகம் எதில் உள்ளது – நம்
உண்மை அன்பில் உள்ளது.

உணர்வோம், உயர்வோம்,
உள்ளத்தை அடக்கி வெல்வோம்.

பெ.சகாதேவன்,
ஆயுள் தண்டனை சிறைவாசி எண்.96411
மத்திய சிறை, திருச்சி.

# <u>கல்விக்கண் திறப்போம்</u>

கல்வி பயிலும் செல்லங்களே
நாட்டின் அன்பு சின்னங்களே
அறிவு கற்ற தங்கங்களே
பள்ளியில் உயர்ந்து செல்லுங்களே
பட்டம் பெற்று நாட்டின் பயன் காட்டுங்களே
திட்டமிட்டு தேசியம் உயர்த்தி மகிழுங்களே
கெட்ட மனிதனை மதித்து திருந்துங்களே
சட்ட திட்டம் உணர்ந்து வாழுங்களே
பட்டி தொட்டி வாழ்வில் மகிழ்ந்து ஊன்றுங்களே
பஞ்சம், பசி தடுக்க உழைத்து உந்துங்களே
சங்கத்தமிழ் தழைக்க செம்மை செய்யுங்களே
தாய், தந்தையை தாலாட்டி போற்றுங்களே
ஏற்றத்தாழ்வு நம்மில் இல்லை.
அன்னியர் யாரும் நம்மில் இல்லை.
சிந்தனையின் சிறப்பில் வளர்ந்து காட்டுங்களே
சிற்றின்ப சிந்தனையை தவிர்த்து வாழுங்களே
இயற்கை நமது பிறப்பின் தலைமை
இறைவன் படைத்த உலகை
இனித்து இனித்து பழகி – நாளும்
நட்பில் நாட்டை காப்போம் வளமாய்.

மனித நேயப்பணியில்
பெ.சின்னதுரை,
ஆயுள் தண்டனை சிறைவாசி எண்.93094

## புதிய பரிமாணம்

இதோ புதிய பரிமாணம்
அதோ நமது எதிர்காலம்
தடைகள் ஆயிரம் வந்திடினும்,
தளர்ந்து போகோமே!

காலங்கள் இனி தடையில்லை
கோலங்கள் இனிமேல் அழிவதில்லை
கோழைகள் இனி நாமில்லை,
கொள்கை என்பதை கொண்ட இலட்சியம்!

வெற்றி பெறுவோம், வெற்றி பெறுவோம்
வேதனை என்ற அரக்கனை கொன்றிடுவோம்
அன்பெனும் அரசனை அணைத்திடுவோம்,
அழைத்திடுவோம், அகிலமெங்கும்.

மனித நேயம் வளர்ப்போம்,
மனித நேயம் காப்போம்,
மனித நேயம் மலரட்டும்,
மனித நேயம் பரவட்டும்.

பெ.சகாதேவன்,
ஆயுள் தண்டனை சிறைவாசி எண்.96411
மத்திய சிறை, திருச்சி.

புழல் பெண்கள் தனிச்சிறையில் 03.11.2011 அன்று செங்குன்றம் தீயணைப்பு துறை மற்றும் மீட்புப் பணித்துறை அலுவலர்களால் பயிற்சியும் செயல்முறை விளக்கமும் நடத்தப்பட்டது.





# இன்றைய இளைய தலைமுறை

நிலவைக் கண்டு ரசிப்பவனல்ல
நிலவில் பயிர்ச்செய்யும் கலையறிந்தவன்
விண்மீனைக் கண்டு வியப்பவனல்ல
விண்கலம் படைத்து விண்ணிற்கே அளிப்பவன்
சரித்திரம் பயிலும் மாணவனல்ல
சரித்திரம் படைக்கும் சாதனையாளன்
சாதியம் பேசும் சதிகாரனல்ல
சதிகளை வேரறுக்கும் சாணக்யன்
அண்டை அயலானென பிரிப்பவனல்ல
அகிலமும் நாமேயென இணைப்பவன்
முன்னவனைப் பின்தொடரும் மூடனல்ல
முன்னவனை முந்தி செல்லும் முற்போக்குவாதி
சிற்றின்பம் தேடும் சிறியவனல்ல
பேரின்பம் நாடும் பெரியவன்
தன்னலம் பேணும் தருதலையல்ல
தரணியில் பாரதம் தலை நிமிந்து செல்ல
ஆண்மீகம் அறிவியல் கலை பண்பாடு வீரம் யாவிலும்
வீழாப்புகழ் சேர்க்கத் துடிக்கும் வித்துக்களே
இன்றைய இளைய தலைமுறை
இளையவனேயாயினும் பாரதத்தாயின்
தலைமகன் அவனே

இரா.அய்யாத்துரை
ஆயுள் சிறைவாசி எண்.7282
(ஒருங்கிணைப்பாளர்)
மத்திய சிறை, பாளையங்கோட்டை

# இலட்சிய பாதை

சாதிக்க பிறந்த இளைஞனே...
நீ மட்டும் ஏன் இருவழி பயணம் செய்கிறாய்
சாதனை, சாக்கடை, இரண்டிற்கும் உனக்கு
வித்தியாசம் தெரியவில்லையோ
இமாலயச் சாதனைக்கு இருப்பிடம் இளமையே
கொல்ல வரும் இடர்களை வெல்லுவதும் இளமையே
உனக்கென ஒரு லட்சியம் வைத்துக்கொள்
இலட்சியவாதி வீழ்ந்த இடத்தில் சருகாகி சாம்பலாவதில்லை
விதையாகி முளைத்து விருட்சமாகிறான்
வாழ்க்கையின் நிகழ்வுகள் ஆயிரம் தீக்குச்சிகளை
உள்ளத்தில் உரசிப் போட்டாலும் இலட்சிய தீக்குச்சிதான்
அணையாது நின்று எரியும்
நகர்ந்து செல்லும் நத்தை கூட பெரிய இலட்சிய
கலசத்தை சுமந்தே செல்கிறது
நீ மட்டும் ஏன்
இலட்சியம் சாவதில்லை
இலட்சியவாதியும் சாவதில்லை
இலட்சியவாதிகள் வீழ்ந்த இடத்தில் தான்
நீயும் வீழ்ந்து கிடைக்கிறாய்
நீ மட்டும் ஏன் இயற்கை எய்துமுன்
செத்துக் கிடக்கிறாய்.

ச.ஹரிகரன்,
தண்டனை மாணவன் எண்.219
பார்ஸ்டல்பள்ளி, புதுக்கோட்டை

# மனம் வருந்துகிறேன்

கண்ணீர் என்னும் மையெழுதி கண்கள் பேசிய கதையெழுதி
விண்ணில் வான வீதியிலே விரைவாய் காற்றில் அனுப்பி வைத்தேன்
நேற்று நடந்ததை போல் இருக்கும் நினைவை மாற்ற முடியவில்லை
கண்ணே என்னும் தாய் பாசம் கனிவதில் கலந்தே வீசும்
'பெண்ணும் என்னும் பொறுமை இல்லை
என் மனம் புகழின் அலைகள் சூழலும் இருந்தும் தொடர்ந்து கலக்கம்
அழகாய் ஒருமயில் நடக்கும் அன்பாய் பரிசுகள் கொடுக்கும்
எழிலாய் மழலையை அளிக்கும் இனிமை வாழ்வெனச் சிரிக்கும்
கானகத்தில் ஒர் நாள் என் நெஞ்சுறுக கதறி அழுதேன்
உலகத்தில் ஒரு நாள் உனக்காக நான் என்றும் காத்திருப்பேன்
இந்த மீன் நீரின்றிப்போகும் என்பது ஞாயமா நீயே சொல்
நிலாவின் ஒளிக்கும் உன் கண்களில் இ டம் கொடுத்திருக்கிறாய்
என் கண்மணிக்கு சொந்தக்காரி நானில்லையா
என் ஜீவனுள்ள நாளெல்லாம் உனக்காக நான் காத்திருப்பேன் உன் தாயாக.
வாழ்க்கையில் தவறி விழுந்தோம்
செய்த தவறுக்காக வாழ்க்கையை இழந்தோம்
சொந்தம் பந்தம் பெற்ற பிள்ளைகளை பறிகொடுத்தோம்
சிறையில் அடைக்கப்பட்டோம்
அன்றிலிருந்து ஏங்கி ஏங்கி துக்கங்களை சொல்ல முடியாமல்
துடித்தது இதயம் யாரிடம் சொல்ல முடியும்
கடவுளை தேடினோம் ஆனால் கடவுளும் எங்களை மறந்துவிட்டார்
இன்று இப்பொழுது தான் தெரிந்தது இன்னொரு ஜென்மம் இருந்தால்
வாழ்க்கையில் தவறு இல்லாமல் இனிமையாக வாழுவோம் என்று

**இ.தனலட்சுமி**
**தண்டனை சிறைவாசி எண்.1176**
**பெண்கள் தனிச் சிறை, வேலூர்**

## தெரிந்து கொள்ளுங்கள்

கோபமாய் பேசினால் நல்ல குணத்தை இழப்பாய்
அதிகமாக பேசினால் அமைதியை இழப்பாய்
வெட்டியாய் பேசினால் வேலையை இழப்பாய்
வேகமாய் பேசினால் அர்த்தத்தை இழப்பாய்
அனாவசியமாய் பேசினால் அன்பை இழப்பாய்
பொய்யாய் பேசினால் நற்பெயரை இழப்பாய்
வஞ்சகமாய் பேசினால் நல்வாழ்வை இழப்பாய்
பேசுங்கள் பேசுங்கள் புரிந்து பேசுங்கள்
புரியும்படி பேசுங்கள்
அன்பாக பேசுங்கள் அது உறவின் திறவு கோள்
நிதானமாக பேசங்கள் அது அறிவின் வெளிப்பாடு
சிந்தித்து பேசுங்கள் அது ஞானத்தின் உதயம்
அமைதியாக பேசுங்கள் அது நிம்மதியின் பிறப்பிடம்
உண்மையை பேசுங்கள் அது முன்னேற்றத்தின் முதற்படி
அளவறிந்து பேசுங்கள் அது வெற்றியின் ரகசியம்
பேசாமலும் இருங்கள் அது பேரின்பத்தின் தொடக்கம்.

ராகிலா
தண்டனை சிறைவாசி எண்.2601
பெண்கள் தனிச்சிறை, வேலூர்.

# சிட்டுக்குருவியும் நானும்

சிறிய தானியம் போன்ற மூக்கு, சின்னக் கண்கள், சின்ன தலை, வெள்ளைக் கழுத்து, அழகிய மங்கல் வெண்மை நிறமுடைய பட்டுப்போர்த்த வயிறு, கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டு போர்த்த முதுகு. சிறிய தோகை, துளித் துளிக் கால்கள். இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்துவிடலாம். இவ்விதமான உடலைச் சுமந்து கொண்டு என் வீட்டிலே இரண்டு உயிர்கள் வாழ்கின்றன. அவற்றில் ஒன்று ஆண். மற்றொன்று பெண். இவை தம்முள்ளே பேசி கொள்கின்றன. குடும்பத்துக்கு வேண்டிய உணவு தேடிக் கொள்கின்றன. கூடு கட்டிக் கொண்டு, கொஞ்சி குலாவி மிக இன்பத்துடன் வாழ்ந்து முட்டையிட்டுக் குஞ்சுகளைப் பசியில்லாமல் காப்பாற்றுகின்றன.

சிட்டுக்குருவி பறந்து செல்வதைப் பார்த்து எனக்கு அடிக்கடி பொறாமையுண்டாகும். ஆஉறா, உடலை எவ்வளவு லாவகத்துடன் சுமந்து செல்கின்றது. இந்த குருவிக்கு எப்போதேனும் தலை நோவு வருவதுண்டோ ? அது எனக்குத் தோன்றவில்லை. ஒரு முறையேனும் தலை நோவை அனுபவித்த முகத்திலே இத்தனை தெளிவு இருக்க நியாயமில்லை. பயமும் மானமும் மனிதனுக்குள்ளது போலவே குருவிக்கு உண்டு. இருந்தபோதிலும், கணந்தோரும், மனிதருடைய நெஞ்சை செல்லரிப்பது போலே அரிக்கும் கவலைத் தொகுதியும், அதனால் ஏற்படும் நோய்த் திரளும் குருவிக்கு இருப்பதாகவே தெரியவில்லை.

தெய்வமே, எனக்கு இரண்டு சிறகுகள் கொடுக்க மாட்டாயா ? பாழ்பட்ட மனிதர் கூட்டத்தையும் அதன் கட்டுகளையும், நோய்களையும் துன்பங்களையும், பொய்களையும், உதறி எறிந்துவிட்டு, நான் இச்சைப்படி வானத்திலே பறந்து செல்லமாட்டேனா ? எத்தனை நபர்கள், எத்தனை தேசங்கள், எத்தனை மலர்கள், எத்தனை மலைகள், எத்தனை நதிகள், வெயில், மழை, காற்று, பனி இவையெல்லாம் என் உடம்புக்கு நன்றாய் வழங்கப்பட்டு, இவற்றால் நோய்கள் உண்டாகாமல் எப்போதும் இன்ப உணர்ச்சிகளே உண்டாகும். இந்த நிலை எனக்கு அருள்புரியலாகாதா ? குருவியில் ஆண், பெண் உண்டு, தீராத கொடுமைகள் இல்லை, குருவிக்கு வீடுண்டு, தீர்வை கிடையாது. குருவிக்கு உணவு உண்டு, உழைப்புண்டு, நாயகனில்லை, சேவகமில்லை.

தெய்வமே, எனக்கு இவ்விதமான வாழ்க்கை தரலாகாதா ? குருவிக்கில்லாத பெருமைகள் எனக்கும் சில அருள் செய்திருக்கிறாய் என்பது மெய்தான். இந்த குருவி என்ன சொல்கிறது ? ‘‘ விடு ‘‘ ‘‘விடு ‘‘ ‘‘ விடு ‘‘ என்று கத்துகிறது. இஃது நான் விரும்பிய இன்பத்திற்கு வழி இன்னதென்று தெய்வம் குருவித் தமிழிலே எனக்கு கற்றுக் கொடுப்பது போலிக்கிறது.

விடு, விடு, விடு தொழிலை விடாதே, உணவை விடாதே, பேச்சை விடாதே, கூட்டை விடாதே, குஞ்சை விடாதே, உள்ளக்கட்டை அவிழ்த்துவிடு, வீண் யோசனையை விடு, துன்பத்தை விடு.

‘‘ விடு ‘‘ என்ற சொல்லில் இருந்து தான் ‘‘ வீடு ‘‘ என்ற சொல் வந்தது. வீடு என்பது விடுதலை, இதை வடமொழியில் முக்தி என்கிறார்கள். இந்த நிலைமையை இறந்துபோனதன் பின்பு பெற வேண்டும் என்று பெரும்பாலோனோர் விரும்புகிறார்கள். இவ்வுலக வாழ்க்கையிலேயே இப்போதே இந் நிலைமை விரும்புதல் நன்று.

விடுதலை இன்பத்திற்கு வழி, விடுதலை பெற்றோர் வறுமையிலிருந்து மாறிச் செல்வமடைவார்கள், மெலிவும், நோயும் நீங்கி வலிமையும், உறுதியும் பெறுவார்கள், சிறுமை நீங்கிப் பெருமை காண்பார்கள், துன்பங்கள் நீங்கி இன்பம் எய்துவார்கள்.

நான் விடுதலை பெறுவேன், எனது கட்டுக்கள் அறுபடும், இந்த சிறை கதவுகள் எனக்காக திறக்கப்படும். நான் விடுதலை பெறுவேன். என்னிச்சைப்படி எப்போதும் நடப்பேன். என்னின்சையினாலே பிறருக்குத் தீங்கு விளையாது. எனக்கும் துன்பம் விளையாது. எப்போதும் நிறைவேற்றும்படியாக, கனந்தோறும் எனக்குப் பிராண சக்தி வளர்ந்துக் கொண்டு வருக, உயிர் வேண்டுகிறேன், தலையிலே இடி விழுந்தபோதிலும் சேதப்படாத வயிர உயிர், உடலை எளிதாகவும், உறுதியுடையதாகவும், நேர்மையுடையதாகவும் செய்து காக்கின்ற உயிர்.

அறிவு வேண்டுகிறேன். எந்தப் பொருளை நோக்குமிடத்தும், அதன் உண்மைகளை உடனே தெரிந்துக் கொள்ளும் நல்லறிவு எங்கும் எப்போதும் அச்சமில்லாத வலிய அறிவு.

பிறவுயிருக்குத் தீங்கு தேடமாட்டேன். என்னுடைய உயிருக்கு எங்கும் தீங்கு வரமாட்டாது.

பராசக்தி, நின்னருளால் நான் விடுதலை பெற்று இவ்வுலகத்தில் வாழ்வேன்.

**கோ.சை.ஷர்மிளாபேகம்**
**தண்டனை சிறைவாசி எண்.2921**
**பெண்கள் தனிச் சிறை, வேலூர்**

# <u>உண்மையான நட்பு</u>

உன் நட்பு என்றும்
படியில் உறங்க நினைக்கிறேன்.
விடியும் வரை அல்ல – மண்ணில்
முடியும் வரை

மனமே மனமே
என்மன நினைப்பாயா
வண்டி சுழல
கடையாணி போதும்
நடமு நட்பு தொடர
கண்ணீர் துளி மட்டுமே போதும்

கையில் அடிபட்டால்
கண்கள் அழும்
கண்கள் அழுதால்
கை துடைத்து விடும்
நடமு நட்பும் அதுபோலவே

நீ கேட்காத கேள்விக்கும்
நான் சொல்லாத பதிலுக்கும்
நீ கேட்க நினைத்த கேள்விக்கும்
நான் சொல்ல வந்த பதிலுக்கும்
புரிதலின் இடையே உள்ளது.
உனக்கும் எனக்குமான நட்பு.

நட்பு ஒன்றுதான்
நாம் நமக்காக
சேர்த்து வைக்கும் சொத்து.

வை.வரலட்சுமி
ஆயுள் தண்டனை சிறைவாசி எண். 3134
மகளிர் தனிச்சிறை, திருச்சி–08.

சிறப்புப் பேட்டி

பத்திரிகையாளர்களிடம் பேசிய சிறைத்துறைத் தலைவர் திரு.டோக்ரா, அனைத்து மத்திய சிறைகளிலும், பெண்கள் தனிச்சிறைகளிலும் சிறைவாசிகள் தங்கள் குடும்ப உறுப்பினர்களை தொடர்பு கொள்ள ரூ.1.58 கோடி செலவில் தொலைபேசி வசதி வழங்க அரசாங்கத்தின் உத்தரவின் பேரில் ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார். இவ்வாறு சிறைவாசிகளுக்கு அரசாங்கமே தொலைபேசி வாய்ப்பு அளிக்கும்பட்சத்தில் அவர்கள் மறைமுகமாக கைத் தொலைபேசிகளை பயன்படுத்த அவசியம் இல்லாமல் போகும்.



# புழல் – 2

# மத்திய சிறை முகப்பு தோற்றம்

